Registered at the G. P. O. as a News Paper No. 59-300

# வெற்றிமணி

Registered No. 10, 845

மலர் 2 | 1...7...56—விலை சதம் 25 | இதழ். 7

## தமிழ் அபிமானிகளுக்கோர் வேண்டுகோள்.

அன்புடையீர்!

பாஷைப்பிரச்சனை மிகச்சிக்கலான நிலையடைந்திருக்கும்இச்சந்தர்ப த்தில் தமிழ்த்தலைவர்கள் தங்களுக்குள்ள தனிப்பட்ட கருத்துவேற்றுமைகளை நீக்கித் தமிழ்த்தாயின் நலன்கருதி ஒன்றுசேர்ந்து கருமமாற்ற வேண்டுமென்று வேண்டுகின்றோம். தமிழ்த்தொண்டு செய்யும் எண்ணத்துடன் வெளியிடப்படும் பத்திரிகைகளில் தமிழ்த்தலைவர்கள் ஒருவரை யொருவர் தாக்கிப்பேசும் விஷயங்கள் மலிந்துகிடக்கின்றன, இப்படிப்பட்டவிஷயங்களைப் பத்திரிகை ஆசிரியர்கள் நிராகரித்து தமிழ்வளர்ச்சிக்குரிய விஷயங்களை வெளியிட்டுத் தமிழ்ப்பணிபுரியுமாறும் கேட்கின்றோம். தமிழ்த்தலைவர்கள் கூட்டங்களில் ஒருவரையொருவர் தாக்கியும் கட்சிகளைத்தாக்கியும் பேசுவதைநிறுத்தி ஒரேயினத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை மனதில்வைத்து, தங்களுக்கிடையிலுள்ள தனிப்பட்ட பகைகளையும் கொள்கைகளையும்விட்டு யாவரும் ஒன்றுசேர்ந்து தமிழின்நலனையும் தமிழர்நலனையும் காக்கவேண்டுமெனவும் வேண்டுகின்றோம். சிறப்பாகத் தமிழாசிரியர்கள் தங்கள் மாணவர்களுக்குத் தமிழின்பெருமையை விளக்கித் தமிழ்மொழியைக் கற்க ஆர்வத்தை உண்டாக்கவேண்டும் எனவும் வேண்டுகின்றோம். ஆசிரியர்

## பேனுநண்பர்கள் (இந்தியா)

131. ஜி. சேதுராமன். 7-9 அரிசிக்கொள்ளுவான் தெரு. சிவகாசி.
132. டி. ஆர். கணேசன் 8 677 மாரிநாய்க்கன்தெருசெவ்வாய்ப்பேட்டை சேலம். 133. எஸ். சுப்பையா 19 லட்சிமிபுரம் 5—வதுதெரு மதுரை.
134. மா. இரத்தினசபாபதி வேலப்பர் கோவில்தெரு கம்பம் மதுரை
135. என். சுந்தரம் 3-ம் வலம்புரிரோட்டு வளையப்பட்டி.
136. கே. எஸ் லலிதா 48—கே. ரோடு. ஜாம்ஷெட்பூர்.
137. பி.மாயநாயகாதன் 11/12ஆலிவர்ரோடு. சந்தைவெளித்தெருசென்னை
138. ஆர். இராஜகோபாலன் மாமாரோடு தரம்பேட்—நாகபுரி.
139. எம் குணசேகரன் 122-வடக்குமாசிவீதி—மதுரை.
140. கே. தியாகராஜன் 71—சின்னக்கடைத்தெரு திருவண்ணமலை.

## எமதுஏஜண்டுகள்

28 கொட்டக்கலை M. S. VELU Ythanside KOTAGALA
29 குருநாக்கல் S. N. SINNARAJAH 95, Puttalam Road Kurunegala
30 சிலாபம் ALFRED DE SILVA 7/1 Mahal Road Chilaw
31 கண்டி ANADA BAWAN 38, Peradeniya Road Kandy

## சுதந்திரன் போட்டி இல 28

**பரிசு ரூபா 1000** **முடிவுதிகதி 18...7...56**

**திட்டமானவிடைகள்**

இ-வ 1. சத்தியாக்கிரகம் 6. ராகம் 8. மம்மர் 16. யக்கேசன் 26. சைகை
மே-கீ 1. சம்பாத்தியம் 2. திறம் 3. கிராமம் 4. ரகம் 5. கம்மல்.
10. கடன் 13. ரிக் 21. வம்பு 23. கசை 25. போது

### மாற்றுவிடைகள்

இ-வ 7. பாவம்-பாபம்; பாபம்-தீமை;
இரண்டும் ஒரேபொருளுடையன. எமதுவிடை **பாவம்**

இ-வ 9. மகம்-யாகம்; யாகம்-வேள்வி; ஊகம்; யோகம்-தியானம்
தியானம் முனிவர்கள் மாத்திரம் செய்வதல்ல ஆனால் பழங்காலமுனிவர்கள் யாகம்செய்வது வழக்கம் எமதுவிடை--மகம் மாற்றுவிடை--யாகம்;யோகம்

இ-வ 12. திரிவு-திரிபு; திரிபு-வேறுபாடு; எமதுவிடை **திரிவு**

இ-வ 27. துயரம்-துன்பம்; துக்கம்-துன்பம்; துன்பம்-மனவருத்தம்.
மனத்திற்கும் துயரத்திற்கும் பொருத்தமதிகம் "மனத்துயரம்" என்றே கூறுவதுவழக்கம் எமதுவிடை துயரம் மாற்றுவிடை-துக்கம்

மே-கீ 11. மடிமை-சோம்பல்; மிடிமை-வறுமை; அடிமை-சிறை
மிடிமை, அடிமைத்தனத்தில் சிக்கியநாடுகள் பொருளாதாரத்தில் மேம்படுவது முடியாதகாரியம் ஆனால் சோம்பல் இருக்குமானால் எப்படி முன்னேறமுடியும் எமதுவிடை மடிமை மாற்றுவிடை அடிமை

மே-கீ 14. பூவை-பெண்; பாவை-பெண்; எமதுவிடை--**பூவை**

மே-கீ 18. பரி-குதிரை; கரி-யானை
குதிரைப்படை இப்பொழுதும் உண்டு ஆனால் யானைப்படையில்லை. எனவே பழங்காலத்து இந்தியமன்னர்களிடம் யானைப்படையும் இருந்தது என்பதே சிறப்பு எமதுவிடை கரி

மே-கீ 22. மௌனம்-மோனம்; மோனம்-பேசாமை. எ-வி. மோனம்

### இணைப்புகள்

| இ-வ 15. | மே-கீ 15. | இ-வ 19. | மே-கீ 19. |
|---|---|---|---|
| அடி | அனல் | நெல் | நெதி |
| | அனலி | பொலி | பொதி |
| கடி | கனல் | நெல் | நெதி |
| | கனலி | பொலி | பொதி |

அனல், அனலி, கனல், கனலி யாவும் அக்கினி என்றபொருள்படும் பொலியென்பதற்குத் தூற்றுநெல் என இருப்பதாலும் புடைத்துக் குற்றினால் எனக் குறிப்புக் கூறுவதனாலும் பொலி சிறந்தவிடை அடி, கடி என்பதில் கடி சிறந்தவிடை எனவே எமதுவிடை கடி, கனலி, பொலி, பொதி

மாற்றுவிடை அடி, அனல், நெல், நெதி 4... பிழைகளை யுண்டாக்கக்கூடியது எனவே மற்றவிடைகளையும் கவனிக்க

| மே-கீ 17. | இ-வ 20. | | இ-வ 24 |
|---|---|---|---|
| சஞ்சலம்- | சவரி | } சாமரை | கலம் |
| சங்கடம் | கவரி | | குடம், கடம் |

குறிப்பு:- மண்பாத்திரம்-கலம் என்பதற்கு மட்கலம் எனப்பொருளுண்டு எமதுவிடை சஞ்சலம், சவரி-கலம் மாற்றுவிடை சங்கடம் கவரி-குடம்.

## மாணவர்மன்றம்

அன்பார்ந்த மருமக்களே!

இந்தஇதழில் விஞ்ஞானப் புதுமைகள் என்றவிஷயம் வெளியிடப்படுகின்றது. எழுதியவர் "தமிழ்த்தம்பி,, என்பதை யாவரும் அறிவீர்கள். "வீரவாள், "மதுவாழ்க,, "வாழியபொங்கல்,, ஆகியவிஷயங்களால் தம்மைஅறிமுகம் செய்வைத்துள்ளார். மேல்வகுப்பு மாணவர்களுக்கு இந்தவிஷயம் மிகவும் உதவியாக இருக்கும். வெற்றிமணியின் வளர்ச்சிக்குத் தன்ருலியன்ற தொண்டுசெய்வதாக அடிக்கடி எழுதும் இந்தமருமகன் இருநண்பர்களை மாணவர்மன்ற அங்கத்தினராகவுஞ்சேர்த்து அனுப்பியுள்ளார். ஈழத்திலுள்ள மருமக்களும் இவரைப்போன்று, தங்கள் தோழர்களை மாணவர்மன்றத்தில் சேர்த்து உதவிசெய்யும்படி கேட்கின்ரேம். சென்றவாரத் தொடர்ச்சி ஆத்திச்சூடி வெளியிடப்படுகின்றது (மணிமாமா)

### ஆத்திச்சூடி தொடர்ச்சி...

6. "ஊக்கமது கைவிடேல்" செய்தொழில்மனஞ் சோராமையைநீகைவிடாதே
7. "எண்ணெழுத்திகழேல்" கணிதநூலையும், இலக்கணநூலையும்நீ இகழ்ந்து தள்ளாதே. அவற்றைப் புகழவேண்டுமென்பது கருத்து.
8. "ஏற்பதிகழ்ச்சி" ஒருவரிடத்தில் போய் இரப்பது இகழ்ச்சியாகும்.
9. "ஐயமிட்டுண்" பிச்சையை இரப்பவர் களுக்குக் கொடுத்து நீஉண்.
10. "ஒப்புரவொழுகு" உலகநடையையறிந்து நீ அந்தவழியில் நட.

### மாணவர் மன்ற அங்கத்தவர்கள்

60, மு. மகேந்திரன் அர்ச்சாந்தமரியநாயகி கல்லூரி அவிசாவலை.
61. சு. சிவபாதம் வடவரணிசைவப்பிரகாச வித்தியசாலை வரணி.
62. த. பஞ்சாட்சரம். மத்தியகல்லூரி மட்டக்களப்பு.
63. செல்வி. பொ. அன்னம். கணேச வித்தியாசாலை சித்தங்கேணி.
64. செல்வி பத்மாதேவி வேலுப்பிள்ளை சைவமங்கையர் வித்தியாலயம் வெள்ளவத்தை,
65. அ. சிவதாசன் மகாஜனக்கல்லூரி தெல்லிப்பழை.
66. ரி. துரைசாமி வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி சித்தங்கேணி
67. எஸ் கந்தன் தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி சின்னுளபட்டி மதுரை.
68. கா. மை. மதுரைப்பாண்டி தே. உ. பள்ளி சின்னுளபட்டி.மதுரை.
69. செல்வி மா. சிவபாக்கியம். ஆறுமுகவித்தியாசாலை சுளிபுரம்.
70. செல்வி பவுஸியா—ஸாஹிர் அர்ச்சூசையப்பர் கல்லூரி கொழும்பு

**மனஅமைதி, உள்ளமகிழ்ச்சி, பேச்சடங்கல், உள்ளத்தைக் கட்டியடக்கல், எண்ணத்தூய்மை, இவைமனதால் செய்யப்படும்தவம்.**

# 'விஞ்ஞானப் புதுமைகள்'

* * * * *

எங்கள்குரல்:—

[தோழர் தமிழ்த்தம்பியவர்களின் எழுச்சியான மேடைப்பேச்சிலே மெய்சிலிர்க்காதவர் எவருமே இலர். 16...9...55 இல் சின்னுளபட்டி தேவாங்கர் உயர்நிலைப்பள்ளியில் ஆயிரக்கணக்கான மாணவ-மாணவிகள் குழுமிய கலைமன்றத்தில் "தம்பி" பேசியதன் சுருக்கத்தை வெளியிட்டுள்ளோம். எங்களுக்கும் நல்லபெருமைகிடைத்தது இதை "வெற்றிமணி" யின் வாயிலாக ஒலிக்கச்செய்திருக்கிறோம் ஈழ இளைஞர்களின் எழுச்சியைக்கருதி படித்துப்பயனடைவார்களாக!]

வணக்கம் 'அறிவு நிலையத்தார்

---

அன்புள்ள ஆசிரியர்அவர்களே! மாண்புமிக்க மாணவத்தோழர்களே! தோழியர்களே! உங்கள்யாவருக்கும் எனதுநன்றி கலந்தவணக்கம்!

"பழயன கழிதலும், புதியனபுகுதலும்" என்றபடி பழமையை வெறுத்து இன்று ஒவ்வொருதுறையிலும் நாம் புதுமையை விரும்புகின்றோம். எதனுல் வந்தது இந்தவிளைவு? மனிதன் நாகரிகம் பெற்றதனுலல்லவோ! அந்நாகரிகத்திற்கு அஸ்திவாரம் நாட்டியது விஞ்ஞானம் ஆம்! விஞ்ஞானப் புதுமைகளேதான்! எடுத்துக்கொண்ட பொருளும்கூட அதேதான், விரிந்ததலைப்புஇது; விளக்கமானதும்கூட. இதுபற்றிவிளக்க வேண்டுமாளுல் விடிவெள்ளிகூட உதயமாகிவிடலாம். ஆனுல் கொடுக்கப்பட்ட அவகாசமோ குறைவு கொளுத்தும் காலை வெயிலிலே நிற்கும் உங்களை அதிகநேரம் சோதிக்க விரும்பவில்லை.!

அறிஞன் டார்வின் ஆராய்ச்சிப்படிப்பு மனிதன் எப்படி யெப்படியோ பிறந்தான்; வளர்ந்தான்; மாற்றமடைந்தான். காடுகளிலும், மேடுகளிலும் அலைந்து திரிந்து மரப்பொந்துகளிலும், பாறையின் இடுக்குகளிலும் வசித்து மானத்தைக்காக்க மரப்பட்டைகளையும், இலை, தழைகளையும் ஆடையாக உடுத்தி, பசிதீர்க்க பச்சை இறைச்சியைப் புசித்து வனவாசியாக அலைந்தான் அன்றைய ஆதிமனிதன்! குதிக்கும் நீர்வீழ்ச்சியையும், கொந்தளிக்கும் கடலையும், முட்டும்மாட்டையும், கொட்டும் தேனையும் கண்டான் அவனது வாழ்விலே! சரணமென்று சாய்ந்தான் அறியாமையால் அஞ்சி அடங்கிக்கிடந்தான். திடீரென்று அந்த அந்தகார இருளைக்கீறி ஒருஜோதி மின்னல் பளிச்சிட்டது. ஆம்! அதுதான் விஞ்ஞானம்! அதன்பயனுக கணக்கற்ற புதுமைகள் பூக்கத்தொடங்கின!

பறக்கும் விமானம்; ஒன்றரை அங்குல கர்டரிலே ஓடும்ரெயில்' நீராவிக்கப்பல், படம் பிடிக்கும்கருவி, டெலிபோன், டெலிவிஷன், வானொலி, தந்தியடிக்கும் சாதனம், ஹெலிகாப்டர் என்றபுதுமைவிமானம், பட்டென்று தொட்டதும் பால்போன்ற ஒளியைக்கக்கும் மின்விளக்கு. இன்னும் இதுபோன்று அளவிடற்கரிய புதுமைசாதனங்களைக் கண்டுபிடித்தான்! ஓலைச்சுவடியிலே எழுத்தாணிகொண்டு கிறுக்கிய காலம் மலையேறியதுமுதல் இன்னும் அனேகதுறைகளிலே முன்னேற்றம் ஏற்பட்டது இருண்டுகிடந்த சமுதாயத்திலே ஒளிபரப்பியது விஞ்ஞானம்! உலகம் பாயுமல்ல; தட்டையுமல்ல; ஆதிசேஷனுக்குள்ள ஆயிரம் தலைகளொன்றில் இருப்பதுவுமல்ல; பூமாதேவி ஆண்டுக்கொருதரம் தோள்மாற்றுவதுமல்ல; பூமிஉருண்டையானது! ஆகர்ஷணசக்தியால் சுழலுகின்றது. என்று ஆதாரபூர்வத்துடன் அடித்தாப்போலக் கூறியது விஞ்ஞானம்! மோட்சமும் நரகமும் தேடிஓடவேண்டாம்! என்னிடம்வா நான் காட்டுகிறேனென்று அறைகூவல் விடுத்தது விஞ்ஞானம்! ஏழுமலையானுக்கு காவடிதூக்கிவிட்டு பகுத்தறிவு பெற்றவனென்று மார்தட்டும் மானிடனேகேள்! இமயத்திலுள்ள எவரஸ்ட்சிகரத்தில் கைலை இல்லையடா! வெறும்பனிமலைதான் என்பதைக்காட்டியது விஞ்ஞானம்! இன்றுசெயற்கைச் சந்திரனை உண்டாக்குமளவிற்கு ஊக்குவித்தது அநுபவ விஞ்ஞானமே! ஒருவனுக்கு வியாதிவந்து அவஸ்தைப்படுவது அழிவது விதியல்லடா அதுவெறும் வேதாந்தம்! என்னிடம்வா இன்ஜெக்ஷன் செய்து சுகமாக்குகிறேன் என்று கூறியது விஞ்ஞானம்! பழமைபேசும்பக்தனே! இதோ புதுமைப்பிரசாதம் பெற்றுக்கொள்! என்றுபூரிப்புடன், புரட்சியுடன் கூவியது விஞ்ஞானம்!

இன்னும் இயம்பமுடியா எண்ணற்ற புதுமைகளை உண்டாக்கிய அதேவிஞ்ஞானத்தை அழிவுக்கு என்று ஆர்ப்பரிக்கும்போதுதான் நமது ரத்தம்கொதிக்கின்றது பெற்றஅறிவினாற் பயன்என்னவென்று? அணுகுண்டு, ஹைட்ரஜன்குண்டு, கோபால்ட்குண்டு, நாசகாரிகள், விஷவாயுக்கள் இப்படியாக அழிவுக்கருவிகளை அதிகமாக்கி உலகையே கொலைக்களமாக்கத்துடிப்பதுதான் முன்னேற்றமா? அழிவுக்கல்ல விஞ்ஞானம்; ஆக்கத்திற்கே என்பதையுணரவேண்டும். நாசம்விளைவிக்கக்கூடாததே உண்மையான முன்னேற்றமாகும். இப்போது அணுகுண்டு போன்ற அழிவுக்கருவிகளை ஆக்கத்திற்கும் உபயோகிக்கலாம். அதற்கானமுயற்சிகள் நடைபெறுகின்றன என்று கேள்விப்படும்போது நாம் மகிழ்கின்றோம்.

இதைசாக்காக வைத்துக்கொண்டு ஒருசிலர் வேண்டாமென்று கூறிக்கொண்டே விருந்து சாப்பிட்டுவிடுபவரைப்போல விஞ்ஞானத்தினால் பயனடைந்துகொண்டே வெறுப்பர். கத்தியிருக்கிறது; கனியும் வெட்டலாம்; கன்னல்மொழிபேசும் மழலையையும் மாய்க்கலாம். அதற்காக கத்தியே வேண்டாமென்பதா? நெருப்பை ஆக்கத்திற்கும் பயன்படுத்தலாம்; அழிவுக்கும் பயன்படுத்தலாம்! பின்னதற்காக நெருப்பே கூடாது என்று கூறுவது எவ்வளவுபேதமை?

அந்தகாலத்து பெருமைபற்றியே பேசும் ஒருவரையெடுத்துக் கொள்ளுங்கள். ரெயிலிலே அவர்சென்று கொண்டிருக்கும்போது ஏதோ "ஸ்டீமர்" கோளாறினால் வண்டியிடையிலேயே நின்றுவிட்டதாகவைத்துக்கொள்வோம். அப்போது அவர்முணகுவதைப் பார்க்கணுமே! பழமையின் பக்தனாகிய இவர் அக்கால முறைப்படி கையில் கட்டுச் சோற்று மூட்டையுடன் நடந்தேகம்பி நீட்டலாமே! அடியாராயிருக்கட்டும், அல்லது வேறெவராகவோ இருக்கட்டும்; உடம்புக்கு அதிகமாயிருந்தால் டாக்டர் வீட்டை நோக்கித்தானே ஓடுகிறார்? அதைவிடுத்து அரிபரந்தாமனின் விடுதிக்கல்லவே! பணம் கொடுத்துவாங்கக்கூடிய பொருளா விஞ்ஞானம்? இல்லையே! ஆயிரக்கணக்கான அறிஞர்களின் இதயத்தைக் கசக்கிப் பிழியப்பட்ட ஓர்ஔஷதமல்லவா! "கலியுகம்" என்றுகானமிசைக்கும் பலர் ஆண்டவனின் ஆலயத்திற்குச்சென்றதும் கர்ப்பக்கிருகத்திலே அலங்காரமாக எரியும் மின்விளக்கொளியில் ஆண்டவனதுமுகம் தெரியவும்தானே ஆயிரம் முறைகுட்டிக்கொள்கின்றனர்?

"சிம்சன்" என்ற மேனாட்டு அறிஞன் "குளோரபாம்" என்ற மயக்கமருந்தைக் கண்டுபிடித்ததுமே "காலிப்பசங்க கர்த்தருக்குத்துரோகம் பண்ணிவிட்டார்கள்! என்றெல்லாம் ரோமாபுரியிலிருந்து கொண்டு கர்த்தபக்கூச்சலிட்டார் போப்பாண்டவர்! மதத்திரையிலே மறைந்து மாளிகையிலே உலவும் மதிப்பு மிக்கவரல்லவா? மனிதகுலமாணிக்கம் போப்பாண்டவர்! ஏன்சொல்லமாட்டார்? சொல்லியிருப்பார் நிச்சயம்! ஆனால் சென்றஓரிரு மாதங்களுக்குமுன் போப்பாண்டவருக்கு ஏற்பட்டவியாதியைப் போக்க சிகிச்சைசெய்ய மேனாட்டு டாக்டர்கள் விமானத்தில் பறந்து சென்றனராம்! ஐயோ! ஆண்டவரே! எங்கே ஐயா உமதுமந்திரமெல்லாம்? அல்வா வேண்டும்; ஆனால் அதைச்செய்பவன் இருக்கக்கூடாதாம். அப்படியென்றால் ஆகாயத்திலிருந்தா அல்வா மழை பொழியும்? அட, அல்பாயுசுகளே! இப்படிப்பட்ட விசித்திர மனப்பான்மையுள்ளவர்களால் இந்தசமுதாயம் என்ன நன்மையடையப்போகிறது?

புவிஈர்ப்பு நியூட்டன், ரெயில் ஸ்டீவின்சன், மோட்டார் ஹென்றிபோர்ட், பேனா வாட்டர்மென், மின்சாரம் பெஞ்சமென் பிராங்க்ளின், விமானம் ரைட்சகோதரர்கள், டெலிபோனும் படம்காட்டும் கருவியும் எடிசன், ரேடியோ மார்க்கோனி, "எக்ஸ்ரே" ராண்ட்ஜன், "பென்ஸிலின்" அலெக்ஸாண்டர் பிளமிங், நீராவிஎன்சின் "ஜேம்ஸ்வாட்" அம்மைகுத்துதல் "எட்வர்ட்ஜென்னர்", இருதுலேஷன் லூயிபாஸ்டர், விசைத்தறி "எட்வர்ட்கார்படைட்", இப்படியெல்லாம் அரிய பெரிய சாதனங்களை அயல்நாட்டுக்காரர்களே கண்டுபிடித்துள்ளனரே! செத்தபின் சிந்துபாடும் இந்தநாடு! கனகவிஜயர்களை கல்சுமக்கவைத்த வீரம் பற்றிக்கதைக்கும் திருநாடு! வாய்வீரமடிக்கும் வளநாடு என்ன செய்திருக்கிறது? இங்குள்ளோர் எதைக்கண்டு பிடித்திருக்கின்றனர்?

குட்டித்திருநாடே!......என்றுகுமுறும் நாம் என்ன செய்திருக்கிறோம்? சிந்தித்துப்பாருங்கள்! அண்ணல் மகாத்மாவின் முயற்சியால் மதுக்கடை ஒழிந்தது இன்னும் குடிப்பழக்கம் ஒழியவில்லையே! காலையில் எழுந்ததும் பெட்காபி குடிப்பதுமுதல் உதட்டுச்சாயம் தடவும் வரை தானே நமதுநாகரிகம் வளர்ந்திருக்கிறது? இதுதான் நாகரிகமா? ஆம்! என்றால் ஒடுங்கள் அமெரிக்காவுக்கு! கடன்கேட்டு வாங்கி வாருங்கள் ஓரிருஅணுகுண்டுகளை! வீசுங்கள் இந்தவிவேகமற்ற நாட்டின்மீது! பொசுங்கட்டும்! அழியட்டும்! அடியோடு! செய்வார்களா அறிவுத்திறன் ஆராய்ச்சிமிக்கோர்? மேலைநாட்டிலோ எங்குபார்த்தாலும் ஆராய்ச்சிக் கூடங்கள் இருக்கத்தவறுவதில்லை. இங்கோ தெருவுக்குப் பத்துஹோட்டல்களை ஏற்படுத்தி போண்டாவையும், ஸ்பெஷல் தோசையையும் கணக்குவழக்கில்லாமல் தானே அடிக்கின்றனர்? சிறுகுண்டூசி முதல் அயலகத்தான்தானே நமக்குச்செய்தனுப்பினான்? அனுப்புகிறான்! ஏன் இந்த இழிநிலை,

அங்கே பறக்கும் பறவையைக் காணுகிறான் அதைப்போல விமானம் செய்கிறான். இங்கோநாமோ கருடவாகனமென்று கதைபேசி கன்னத்தில் போட்டுக்கொள்கிறோம், நீரிலே நீந்திச்செல்லும் மீனைக்காணுகிறான் அங்கே! அதேபோன்று "சப்மரீன்" செய்கிறான்! நாமோ மச்சவதார மகிமை பேசுகிறோம்! வேப்பமரத்திலிருந்து விதவிதமான மருந்துகளைக் கண்டுபிடித்து வேற்று நாடுகளுக்கு விரைந்துஅனுப்புகிறான் அங்கே! நாமோ மாரியாத்தாளின் மகிமையென்று மணியாட்டி பூஜிக்க ஆரம்பிக்கிறோம்.

அங்கே தொழிற்சாலையின் ஆரவாரம்! இங்கே மதக்கூச்சலின் மகத்துவம். (கூட்டத்தில் ஓரே ஆரவாரம்)

இதுதான் அவனுக்கும் நமக்குமுள்ளவேறுபாடு ஏன் இந்தஇழி நிலை? இவ்வளவு படுமோசமான நிலையிலிருந்து கொண்டு அவன்கண்டு பிடித்த அரியசாதனங்களைக் கேலிசெய்வது படுமுட்டாள் தனமாகும்! வருங்கால செயல்வீரர்களாகிய நாம் செய்யவேண்டியது என்ன? "எண்ணுவதால் பயனுண்டு; இளமை எண்ணத்தின் பிரதிபலிப்பே வருங்காலத்தின் வழிகாட்டி" என்று தமிழறிஞர் டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள் கூறியதுபோல பதவிவேட்டையைவிட்டுப் பரந்த நோக்கமுடன் புதுமைவெறியுடன் நாம்வாழவேண்டும். இதைத்தான் தமிழ்மறையருளிய அறிஞர் வள்ளுவனுர்

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"......என்றருளினுர்

நீங்களும் நானும் கோழிமுட்டையைக் கண்டால் என்ன செய்வோம்? உடனே அதை அபேஸ்செய்யப் பார்ப்போம். ஆனல் அந்தச் சிறுவனே அடைக்கோழி வெளியேகிளம்பியதும் நாமும்போய்ப் படுத்தால் என்ன என்றதுணிவு கொண்டு அடையின்மீது போய்ப்படுத்து "அசடே" என்று கேலிசெய்யப் பட்டிருக்கிருன். பாவம்! அந்தச்சிறுவனே வறுமையின் ஏகப்பிரதிநிதி; வாடிவதங்கினுன் பலநாள் ஆதரிக்கயாருமின்றி அனுதையாய் அலேந்தான். நம்மைப்போல் உயர்நிலைப்பள்ளியிலே மட்டுமின்றி ஆரம்பப்பள்ளியிற்கூட அடியெடுத்து வைக்க முடியவில்லை. காரணம்? அவ்வளவு ஏழ்மை! வயிறுவளர்க்க பேப்பரோ!...பேப்பர்! என்று ரெயில்வே பிளாட்பாரத்திலே கூவியலேந்தான்! பின்புதன்முயற்சியால் "வீக்லிஹெரல்ட்" என்ற வாரப்பத்திரிகையை தானே அச்சிட்டு விற்ருன். ஒருநாள் அந்தச்சிறுவன் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்; எப்படியோ தீபற்றிவிட்டது அந்தப்பெட்டியிலே! இதுகண்டு கோபங்கொண்ட ரெயில்வேகார்டினுல் கன்னத்திலறையப் பட்டுக் கீழேவிழுந்தான் சுருண்டு! உடனே அவன்சீறியெழவில்லை; சிம்மம்போல் கர்ஜிக்கவில்லை! நம்மைப்போல் பழம்பெருமையைக் கூறியவன் குதர்க்கவாதஞ் செய்தானில்லை. அந்தச்சிறுவன்தான் நாளடைவில் மின்விளக்கையும், படம்காட்டும் கருவியையும் கண்டுபிடித்தான். பிரமுகர் ஒருவருக்குத் தலைவலி யென்ருல் ரத்தக்கொதிப்பு என்றும், பத்துப்பேருக்கு உணவளித்துவிட்டால் பத்தாயிரம்பேருக்கு அன்னதானம் என்றெல்லாம் ஒருவாரம் தலையங்கமெழுதுமே இங்குள்ள சிலகூலிப்பத்தி–

ரிகைகள்! ஆனால் அந்நாட்டிலோ அவன்கண்டுபிடித்த மின்விளக்கை "மாயம்" என்று மறைத்துவிட்டன. பிரசுரிக்கமறுத்துவிட்டனர்! பின்பு காலம்மாற அந்தச்சிறுவனின் தன்மையை தரணிநன்குணர்ந்து கொண்டது. யார் அந்தச்சிறுவன்? ஆம்! அவன்தான் விஞ்ஞானத்தந்தையென்றுபோற்றப்படும் சர்–தாமஸ்–ஆல்வா எடிஸன் என்றவிஞ்ஞானியாகும்! சமுதாயத்தின் உயர்வுக்காக அல்லும் பகலும் உழைத்து அரியசாதனங்களைக் கண்டுபிடித்த அறிஞர்கள் மறைந்தாலும் மறையாப்புகழுடன் நம்மிடையே என்றென்றும் வாழ்வார்கள் வாழ்கிறார்கள் என்பதில் அணுவேனும் ஐயமில்லை!

அச்ச இருளையகற்றி அறியாமையை ஒழித்து புதுமைமுரசு கொட்டி வரும் விஞ்ஞானம் வாழவேண்டும்! வளரவேண்டும்! அதைவிடுத்து "சிங்கத்திருநாடே!... என்றுகூறுவது சவத்திற்கு மாரடித்த கதையாகத்தான் முடியும். நமக்கு அன்பே ஆயுதம்! ஆராய்ச்சியுடல்! விஞ்ஞானப்புதுமைகளே சொர்க்கம்! இயற்கையே இறைவன்! "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றமனப் பான்மையுடன் தொழிலறிஞர்களாய் வாழ்வோம் ஒன்றாக! இளமையிலே புத்துணர்வும் புதுமைதாகமும் கொண்டு பாரதியின் ஜீவக்குரலின்படி கருவிகள் பலசெய்து நாட்டின் கண்ணீரைத்துடைப்போம்! எழுச்சிபெறாத இளம்காளையர்களே! தோழியர்களே! எழுமின்! விரைமின்! புறப்படுவீர் புதுமைநோக்கி! என்று எழுச்சிக்குரலை எட்டுத்திக்கிலும் உரக்கஎழுப்புகின்றேன்!

எனக்குப் பேசவாய்ப்பளித்த அன்புநிறை ஆசிரியர்களுக்கு என் நன்றி உரித்தாகுக!

வாழ்க விஞ்ஞானம்! வளர்க அதன்சேவை!!

மலர்கபுதுமை!!! எளியேனது பேச்சுக்கு இதுவரை செவிசாய்த்த நீங்கள் வாழ்க! வணக்கம்! [கூட்டத்தில் ஒரே ஆரவாரம்]

● ● ❋ ● ●

## "கற்பனை நாடு"

தொடர்ச்சி........

[வீதிகளில் பாண்டியன் வள்ளுவருக்கு எல்லாவற்றையும் காட்டிக் கொண்டுவருதல்].

பாண்டியன்;- "வையத்துள் வாழ்வாங்குவாழ" வகுத்த வள்ளுவப்பெருந்தகையே! செம்மணச்செல்வியின் பிட்டுக்காக மணசுமந்து, பாண்டியமன்னனால் பிரம்படிப்பட்ட, சோமசுந்தரக்கடவுள் வீற்றிருக்கும் ஆலயம் இதுதான் (சுட்டிக்காட்டுதல்)

இதுதான் ஓவியக்கலைகளிலும், சிற்பக்கலைகளிலும், தேர்ச்சிபெற்றவர்களால் கட்டிமுடிக்கப்பெற்ற மதுரைக்கோபுரம். அழகுவடிவத்துடன், கம்பீரப்பார்வையுடன் மீனாட்சியம்மை வீற்றிருக்கிறாள். சிற்பக்கலையும் ஓவியக்கலையும் போட்டி போட்டுக்கொண்டு மிளிர்வதைப்பாருங்கள்! [ஒருதெருவில்] இதுதான் கூலவாணிகர் தெரு இங்கே ஆங்காங்கு பண்டமாற்று நடைபெறுவதைப் பாருங்கள். இதுதான் மறவர்குடியிற்பிறந்த மாவீரர் தங்குமிடம். கயிற்றிலே தொங்கிய மத்தளம் காற்றால் ஆடி ஓசையை உண்டாக்க அது போர்ப்பறை என்று எண்ணிப் புயங்கள்புடைத்து போருக்குச் சென்றவீரமகன் வாழ்ந்ததெரு இதுதான். இதோபாருங்கள் போர்ப்பறை. அங்கே வேலும் வில்லும் வாளும் அம்பும் கதிரவன்ஒளிபட்டு மின்னுவதைப்பாருங்கள். கொல்லர்கள் ஒடிந்தவாட்களையும் வேல்களையும் உலையிலிட்டு உருக்கிப் புதுப்பிக்கும் அற்புதத்தைப்பாருங்கள். [மற்றொருதெருவில்]

இதுதான் மருத்துவச்சாலை. பிணியால்வருந்தும் மக்கள் போரில் அடிபட்டமக்கள் இங்குஅனுமதிக்கப்படுவர். அதோ! நோயுடன் இருக்கும் மக்கள் அங்குசென்று திரும்புவதைப்பாருங்கள் (அதற்கு அருகிலிருந்த ஒருமடத்தைச்சுட்டிக்காட்டி) இதுதான் ஏழைஎளியவர்கள் தங்குமிடம் பாருங்கள்! அங்கு எத்தனை பேர்படுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் செல்வர்கள் சிறப்புடன் வாழும் வீதி, இதுதான் ஊர்த்தாசிகள் வசிக்கும்தெரு. (தூரத்திலோடிக்கொண்டிருக்கும் வைகையைச் சுட்டிக்காட்டி) மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் செய்தசிறுபிழையினால் வைகையாறு உடைப்பெடுத்துப் பெருஞ்சேதப்படுத்தியது. அந்தஆறு இப்பொழுது எவ்வளவு அமைதியுடன் ஓடிக்கொண்டிருப்பதைப் பாருங்கள்.

வள்ளுவர்:- ஆமாம்! அதன்அழகும், கம்பீரமும், மனதைக்கொள்ளை கொள்வதாய் இருக்கிறது. சரிவாரும்அரண்மனைக்குச் செல்லுவோம்

(எல்லோரும் போகிறார்கள்)

## களம் 3

இடம்:- அவை: பாத்திரங்கள்; மந்திரிபிரதானிகள்; அவையினர்; வள்ளுவப்பெருமான், பாண்டிமன்னன்.

பாண்டியன்:- கவியரசே! தாங்கள் என்நாட்டில் கண்டது- நீர்கற்பனையில் கண்டநாட்டிற்குப் பொருந்தும் எனஎண்ணுகின்றேன்.

வள்ளுவன்;- புவியரசே! மன்னிக்க இங்கேயும் நான் என்கற்பனைநாட்டைக்காணமுடியவில்லை. சென்ற இடங்களிலெல்லாம் எனக்குத் தோல்விதான். நான்கண்ட கற்பனைநாடு இதுவல்ல மன்னவா?

பாண்டியன்;- பெருந்தகையே! அப்படியானால் தாங்கள் கண்டகற்பனைநாடு எப்படிப்பட்டது கூறுங்கள்?

வள்ளுவர்:- மன்னா! நான்கண்டநாடு பசிப்பிணியும், உடற்பிணியும், அழிவுசெய்யும் அழிவுக்கு வழிதேடிக்கொள்ளும் பகைப்பிணியும் பொருந்திய நாடல்ல. இவைகள் எல்லாம் இல்லாமல் தன்னிடம் சேராமல், அமைந்தநாடே நான்கண்ட "கற்பனைநாடு"

"உறுபசியும் ஓவாப்பிணியும், செறுபகையும்
சேராதியல் வதுநாடு"

ஆனால் நின்நாடு எப்படிப்பட்டது? மருத்துவச்சாலைகளைக் கட்டி வைத்திருக்கின்றாய். சத்திரங்கள் பலகட்டிவைத்திருக்கின்றாய். இதிலிருந்து நின்நாட்டில் பிணியால்வாழும் மக்களும் பிச்சைக்காரர்களும் அனேகர் உள்ளனர் எனத்தெரிகிறது. கொலைக்கருவிகளைப் புதுப்பிக்கின்றாய். இது எதைக்குறிக்கின்றது? நீ பிறநாட்டின்மீது அடிக்கடி படையெடுத்துச்சென்று அவர்களைக்கொன்று குவிக்கின்றாய் என்றுதெரிகின்றது. இவைகள்தானா ஒருநாட்டுக்குத்தேவை. இவ்வாறு இருந்தால் ஒருநாடு முன்னேறுமா? உன்நாடு என்கற்பனைநாட்டிற்குப் பொருந்தவில்லை. இனிமேலாவது என்கற்பனைநாட்டைத் தெரிந்துகொண்டு பிறநாடுகள் முன்னேறுமா? திருந்துமா?

பாண்டியன்:- போதும்புலவரே! போதும். என்அகக்கண்கள் இன்றுதான் திறந்தன. நான் அறிந்துகொண்டேன் என்நாட்டை உம்முடைய கற்பனைநாட்டுக்கு ஒருஎடுத்துக்காட்டாக இருக்கும்படி செய்வேன். இனிமேல் போர்த்தொழில் புரியமாட்டேன். பிறநாட்டுமன்னர்களிடம் அன்பாகவும், சமாதானமாகவும் இருப்பேன். உடற்பிணியையும் பசிப்பிணியையும் நாட்டைவிட்டு அகற்றுவேன். உழவுத்தொழிலைப் பெருக்குவேன். இதுஉண்மை.

வள்ளுவர்:- மகிழ்ச்சி! மன்னாமகிழ்ச்சி! நின்வார்த்தைகளைக் கேட்டு அகம்குளிர்ந்தேன். என்கனவுபலித்தது குறித்துமகிழ்ச்சி. நான்மறுமுறை நின்நாட்டுக்கு வரும்பொழுது, நின்நாட்டில் ஏற்படும் மாறுதல்களைக்கண்டு என்கற்பனைநாட்டுக்குப் பொருந்தியிருக்கின்றதா எனப்பார்த்து மகிழப்போகின்றேன். உன்னைக்கண்டு மற்றைய பேராசைபிடித்த மன்னர்கள் திருந்துவார்களா?

"நாடென்ப நாடாவளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு"

மன்னா! நான்சென்றுவருகின்றேன். நின்கொற்றம் வாழ்க! நான் மறுமுறை உன்னாட்டுக்குச் சீக்கிரமே வரநேரிடும்.

பாண்டியன்:- பெருமானே! தாங்கள் இவ்விடம் வந்ததும் மீண்டும் அழைத்துச் செல்கிறேன். மறுமுறைவந்து பாருங்கள் பாண்டிநாட்டைக்கண்டு வியப்பால் திகைத்துவிடுவீர்கள். சென்றுவாருங்கள்.

[எல்லோரும் எழுந்து புலவரைவழியனுப்புதல்]

வான்புகழ் வள்ளுவன் வாழ்க! "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு வாழ்க!

"தமிழ்த்தாய் வாழ்க"

# சிறுவர்போட்டி இல 13

**பரிசு ரூபா 500** — முடிவுதிகதி 21...7...56

## வரக்கூடியவிடைகள்

1. பானை, மனை, சுனை, கூனை.
2. சேலை, சீலை, கலை.
3. கால், வால், பல், தோல்.
4. வீடு, நாடு, காடு, மாடு.
5. அணி, பணி, துணி, பாணி.
6. கரி, அரி, கிரி, நரி.

சரியானவிடை இந்தச்சொற்களுக்குள் தான்தெரிவு செய்யப்படும். நேயர்கள் இங்கேகொடுக்கப்பட்ட சொற்களின் கருத்துக்களை நன்கு பார்த்து ஏற்றசொற்களைத் தெரிந்து எழுதவேண்டும்.


## விளம்பரம்

நீங்கள் உங்கள்பெயருக்கு ரப்பர் ஸ்டாம்பு [சீல்] செய்துகொண்டீர்களா? இல்லையானால் இன்றே எழுதுக. விபரம் தருகின்றோம் உங்கள்பெயருடன் விலாசமும் அமைத்து ரப்பர்ஸ்டாம்பு செய்ய விலை ரூபா 3 தான். தெளிவான விலாசத்துடனும் 75-சதமுத்திரை அல்லது போஸ்ரல் ஆடர் முற்பணத்துடனும் எழுதுக. ஏஜண்டுகளாகச் சேர விரும்புவோர் விபரங்களுக்கு எழுதுக. நல்லகமிஷன் கொடுக்கப்படும்.

சிறுவர் போட்டிக் கூப்பன்களும் மற்றும் தமிழ்போட்டிகளின் கூப்பன்களும் எம்மிடம் கிடைக்கும்.

**கே. ஏ கோவிந்தன்**
**2. ஆம் டிவிஷன்** **நாரங்கலை**

ரப்பர்ஸ்டாம் ஏஜண்ட்
பதுளை

---

## அகராதி தேவையா?

**போட்டி நேயர்களுக்கு!**

**உபயோகித்த ஜுபிலி தமிழ்பேரகராதி நல்லநிலைமையில் விற்பனைக்குண்டு. 1390 பக்கங்கள் விலை ரூபா 17-50 தேவையானோர் உடனேஎழுதுக'**

R. Suppiah - Keenagoda Kadai LUNUGALA.


---


மிட்லண்ட் அச்சகம்-நாவலபிட்டி. ஆசிரியர் ஏ. கே. சாமி